சுருக்கம்

பள்ளிக்கல்வி – பொது நூலகங்கள் -- 2018–19–ஆம் ஆண்டிற்கான அறிவிப்புகள் – மாவட்டங்கள் தோறும் "சிறந்த வாசகர் வட்ட விருது" வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

பள்ளிக்கல்வி (பொ.நூ.1)த்துறை

அரசாணை (நிலை) எண்.124

நாள் 27.06.2018

திருவள்ளுவராண்டு, 2049
விளம்பி வருடம், வைகாசி–13

படிக்கப்பட்டவை:–

பொது நூலக இயக்குநரின் கடித ந.க.எண். 5754/உ1/2018, நாள் 25.06.2018.

~*~~*~

ஆணை:–

2018–19–ஆம் ஆண்டிற்கான பள்ளிக்கல்வித் துறையின் மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட அறிவிப்பினை வெளியிட்டார்கள்:–

"மக்களிடையே நூல் வாசிக்கும் பழக்கத்தை மேம்படுத்தும் பணியில் பொது நூலகங்களுடன் இணைந்து பல்வேறு விழிப்புணர்வு நிகழ்வுகளை செயல்படுத்தி வரும் வாசகர் வட்டத்தினரை சிறப்பிக்கும் வண்ணம் நூலக ஆர்வலர் விருது தலா ரூ.5000 வீதம் 32 மாவட்டங்களுக்கும் வழங்கப்படும். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி இத்திட்டத்திற்கு ரூ.1.60 இலட்சம் செலவிடப்படும்."

2. பொது நூலக இயக்குநர் மேலே படிக்கப்பட்ட கடிதத்தில், பொது நூலக இயக்கம் மக்கள் இயக்கமாக மாறும் வகையில் உறுப்பினர் சேர்க்கை, புரவலர் சேர்க்கை அதிகரித்தல், வாசகர்கள் பயன்பெறும் வகையில் நூலகங்களுக்கு தளவாடங்கள் மற்றும் உபகரணங்கள் நன்கொடையாக பெறுதல், நூலகங்களுக்கு இலவச காலிமனை மற்றும் கட்டடங்கள் பெறுதல், வாசகர்களை அதிகளவில் கவரும் வகையில் நூலகங்களையும், சுற்றுப்புறத்தையும் தூய்மையாக பராமரித்தல், நூலக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் / விழாக்கள் நடத்துதல் மற்றும் வாசகர்களின் மாறிவரும் தேவைக்கேற்ப புதிய சேவைகளை அறிமுகப்படுத்துதல் ஆகியவற்றில் சிறப்பாக பங்காற்றும் அனைத்து மாவட்டங்களிலுள்ள வாசகர் வட்ட அமைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த முறையில் செயல்படும் வாசகர் வட்டத்திற்கு, மாவட்டத்திற்கு தலா ஒரு விருது வீதம் 32 மாவட்டங்களுக்கு தலா ரூ.5000 வீதம் **"சிறந்த வாசகர் வட்ட விருது"** வழங்க, அதற்கான கேடயம் மற்றும் சான்றிதழ்களுக்கான செலவினம் ரூ.5000x32=ரூ.1,60,000/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) சம்மந்தப்பட்ட மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து வழங்க அனுமதி அளித்து ஆணை வழங்குமாறு அரசினை கோரியுள்ளார்.

(த.பி.பா.)

3. பொது நூலக இயக்குநரின் கருத்துரு அரசால் பரிசீலிக்கப்பட்டு அதனை ஏற்று, 2018–2019ஆம் ஆண்டிற்கான அறிவிப்பான மாவட்டங்கள் தோறும் “சிறந்த வாசகர் வட்ட விருது” வழங்குதல் என்ற அறிவிப்பினை செயல்படுத்திட அனைத்து மாவட்டங்களிலுள்ள வாசகர் வட்ட அமைப்புகளை ஊக்குவிக்கும் வகையில் சிறந்த முறையில் செயல்படும் வாசகர் வட்டத்திற்கு மாவட்டத்திற்கு தலா ஒரு விருது வீதம் 32 மாவட்டங்களுக்கு தலா ரூ.5000 வீதம் " சிறந்த வாசகர் வட்ட விருது" வழங்கவும், அதற்கான கேடயம் மற்றும் சான்றிதழ்களுக்கான செலவினம் ரூ.5000x32=ரூ.1,60,000/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) சம்மந்தப்பட்ட மாவட்ட நூலக ஆணைக்குழு நிதியிலிருந்து பெற்று மேற்கொள்ளவும் பொது நூலக இயக்குநருக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது.

4.இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.2010/கூ.த.செ.(நிதி) /2018, நாள் 12.06.2018ல் பெற்ற இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பொது நூலக இயக்குநர் (கூ.பொ), சென்னை – 2.
<u>நகல்:–</u>
முதன்மைச் செயலாளர்,
சிறப்புத் திட்ட அமலாக்கத்துறை, சென்னை–9.
நிதி (கல்வி–II)த்துறை, சென்னை–9.
பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 9.
பள்ளிக்கல்வித் துறை
முதன்மைச் செயலாளர் அவர்களின்
முதன்மைச் தனிச் செயலர், சென்னை–9.
பள்ளிக்கல்வி (வரவு செலவு)த்துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி கோப்பு.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.